**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.</u>**

**<u>STC.No. 191 /2018</u>**

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ம் நாள் திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி–03, திரு.ஆனந்த் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.லதா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஆனந்த் | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | PW03 |
| வட்டம் | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |

**( எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஜெயங்கொண்டம் கரூர் வைஸ்யா வங்கியில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். நான் சாட்சி சொல்வதற்காக, நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்ததன் பேரில்தான், இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்ல வந்துள்ளேன். இந்த வழக்கின் மனுதாரர் வேல்முருகன் எங்களது வங்கியில் நடப்பு கணக்கு வைத்துள்ளார். அவரது வங்கி கணக்கு எண் 1714115000001126 ஆகும். இந்த வழக்கின் காசோலையான ஜெயங்கொண்டம் இந்தியன் வங்கியின் காசோலை எண் 483474ஐ மனுதாரர் எங்கள் வங்கியில் 11.10.2017ம் தேதி கலெக்சனுக்கு செலுத்தினார். வழக்கின் காசோலையானது எதிரியின் வங்கி கணக்கில் பணம் இல்லாத காரணத்தினால் 12.10.2017ம் தேதி திருப்பப்பட்ட விவரத்தை, 16.10.2017ம் தேதி நாங்கள் குறிப்பாணை மூலம் மனுதாரருக்கு தெரியப்படுத்தினோம்.

எங்களிடம் காட்டப்படும் குறிப்பாணை எங்கள் வங்கியில் இருந்து வழங்கப்பட்டதுதான். அந்த குறிப்பாணையானது ஏற்கனவே ம.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

/உண்மை நகல்/

ஒம்/–இரா.இராஜசேகரன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.